10-01-2024
O.S.No. 368/2022

வா. சா. 1 சவுந்தரவேல் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :-

என் அப்பா கணபதி இறப்பதற்கு முன்பு என் அம்மா, நான், பிரதிவாதி, என் சகோதரி அனைவரும் ஒரே குடும்பமாக இருந்து வந்தோம் என்றால் என் சகோதரி உடன் இருக்கவில்லை. என் சகோதரி திருமணமாகி அவரது கணவர் வீட்டாருடன் இருந்தார். என் சகோதரி அடிக்கடி என் தந்தையை பார்ப்பதற்காக வீட்டுக்கு வருவார் என்றால் சரிதான். என் அப்பா 28.01.2022 ம் காசிமாநகரத்திற்கு சென்றபோது அங்கு இறந்துவிட்டால் என்றால் சரிதான். என் அப்பாவின் வாரிசு சான்று என்னிடம் காண்பிக்கப்படுவதுதான். அந்த வாரிசு சான்று பிவாசாஆ.1. வாதசாஆ.5,6,7 ஆகிய மூன்று கிரைய ஆவணங்கள் அனைத்தும் என் அப்பாவினால் கிரையம் வாங்கப்பட்டவை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படுவதுதான் தாவாச் சொத்துக்கள் இருப்பதைக் காட்டக்கூடிய மாதிரி வரைபடம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1 முதல் 27 தாவாச் சொத்துக்கள் எங்கு உள்ளது என்பதை காட்டுவதற்கு என் தரப்பில் வரைபடம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த சொத்துக்கள் மில்லுக்குள் உள்ளது. மில்லின் மொத்த விஸ்தீரணம் 40 செண்ட் ஆகும். 40 செண்ட் சொத்தில் எனக்கு 19 செண்ட், பிரதிவாதிக்கு 19 செண்ட் பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். 2 செண்டின் மேல் மின்சார வயர் செல்வதால் அதை விட்டுவிட்டோம். என் தந்தை இறப்பதற்கு முன்னரே எங்கள் இருவருக்கும் தனித்தனியாக ரைஸ்மில்கள் ஒதுக்கி கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 1 முதல் 27 அயிட்டச் சொத்துக்கள் பிரதிவாதி வசம் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி அவருக்கு கொடுக்கப்பட்ட இயந்திரங்களை வைத்துத்தான் ஆயில் மில்லையும் ரைஸ்மில்லையும் நடத்தி வருகிறார் என்றால் சரியல்ல. நானும்

அதேபோல் எனக்கு ஒதுக்கப்பட்ட இயந்திரங்களை வைத்துத்தான் ஆயில் மில்லையும் ரைஸ்மில்லையும் நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. பிராது பாரா 18 ல் பிரதிவாதி வேண்டும் என்றே அசையாக சொத்துக்களை மட்டும் செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் பாத்தியப்படுத்திவிட்டு அசையும் சொத்தில் எனக்குரிய பாதி பாகத்தினை பிரித்துக்கொடுக்காமல் மோசடி செய்துவிட்டதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் அசையும் சொத்துக்கள் பற்றி சொல்லப்பட்டு உள்ளதா என்றால் இல்லை. என் தகப்பனார் இறந்த பின்னர் நானும் பிரதிவாதியும் சேர்ந்து ஆயில் மில், ரைஸ்மில் வைத்து நடத்தி வந்ததாக பிராது பாரா 7 ல் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய ஆயில் மில்லில் தயாராகும் எண்ணைக்கு விளக்கு பிராண்ட் என பெயரிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என் அப்பா காலத்தில் அந்த பிராண்ட் இருந்தது. எனக்கு இரண்டு சிவசங்கர், பவித்ரா என இரண்டு மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் இருவரையும் என் அப்பா இருந்த காலத்திலேயே கல்லூரியில் அவர் செலவு செய்து படிக்க வைத்தார் என்றால் சரியல்ல. என் அம்மா பிரதிவாதியிடம் இருந்து வருகிறார் என்றால் என்னிடமும் வந்து செல்வார். என் அப்பா இறப்பதற்கு முன்பு வேடசந்தூர் கரூர் வைஷ்யா வங்கியில் ரூ.6 லட்சம் டெபாசிட் வைத்திருந்த பணத்தை நான் மட்டும்தான் எடுக்கவேண்டும் என ஆட்சேபனை செய்து நிறுத்தி வைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. 28.06.2021 ம் தேதி பிரதிவாதிக்கு என் அப்பா எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணம் என்னிடம் காண்பிக்கப்படுவது என்று சொன்னால் சரிதான். அந்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் பிவாசாஆ.2. அந்த பத்திரத்தில் சொத்து விவரத்தில் சர்வீஸ் கனெக்சன் பற்றி மட்டும்தான் சொல்லப்பட்டு உள்ளது என்றாலும் அசையும் சொத்துக்கள் ஆகிய தாவாச் சொத்துக்கள் பற்றி சொல்லப்படவில்லை என்றாலும் சரிதான். மேற்படி பிவாசாஆ.2 ல் என்தகப்பனார் என்னுடைய குழந்தைகளை என் தகப்பனார் படிக்க

வைத்ததாக குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிவாசாஆ.2 தேதியன்றே பிரதிவாதியின் மகன் மைனர் மகேஷ்வரன் பெயருக்கு ஒரு தான செட்டில்மெண்டை என் தகப்பனார் எழுதி வைத்தார் என்றால் சரிதான். அது என்னிடம் காண்பிக்கப்படுவதாகும். அது பிவாசாஆ.3. அந்த ஆவணத்திலும் இயந்திரங்கள் பற்றி குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 20.06.2013 ம் தேதி என் அப்பா என் பெயருக்கு ஒரு தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். அது என்னிடம் காண்பிக்கப்படுவதாகும். அது பிவாசாஆ.4. அதிலும் இயந்திரங்கள் பற்றி சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பிவாசாஆ.4 ல் பிரதிவாதி சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதியின் மகன் பெயருக்கு உள்ள பட்டா என்னிடம் காண்பிக்கப்படுவதாகும். அது பிவாசாஆ.5. என் தந்தையின் இறப்புச் சான்றிதழ் என்னிடம் காண்பிக்கப்படுவதாகும். அது பிவாசாஆ.6. என் அப்பா எங்கள் இருவர் பெயருக்கும் சரிசமமாகத்தான் சொத்தை செட்டில்மெண்ட் ஆக எழுதி வைத்தார். இது மட்டும் அல்லாமல் நான் என் அப்பாவிடம் பிரதிவாதிக்கு தெரியாமல் ரூ.20 லட்சம் வாங்கி சின்னாளபட்டியில் ஒரு வீடு வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா 1 முதல் 27 அசையும் சொத்துக்கள் அனைத்தையும் பிரதிவாதி பயன்படுத்தி வருகிறார் என்றாலும், அதே மாதிரி இயந்திரங்கள் எனக்கும் என் அப்பாவினால் கொடுக்கப்பட்டு அதை வைத்துதான் ரைஸ்மில்லும், ஆயில் மில்லும் நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. நிரூபண வாக்குமூலத்தில் பஞ்சாயத்து நடந்ததாக சொல்லி இருப்பது பொய் என்றால் சரியல்ல. என் அப்பா இறந்தபின்னர் என் அம்மா ரூ.50 லட்சம் இருப்பு வைத்திருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் அப்பா உயிருடன் இருக்கும் போதே கார், லாரி ஆகியவற்றை யார் யார் பெயரில் இருந்ததோ அவர்கள் வைத்துக்கொண்டோம் என்றாலும் பிரதிவாதி அவர் பேரில் உள்ள வாகனத்தை விற்று விட்டார் என்றால் சரிதான். மற்றும் 3 வாகனங்கள்

கம்பெனி பெயரில் உள்ளது. பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட இடம் தகர கொட்டகை என்றும் எனக்கு ஒதுக்கப்பட்ட இடம் ஆர்சிசி மோல்டு கட்டிடம் என்றால் சரியல்ல. எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்தைவிட குறைந்த மதிப்பு அளவிலான சொத்துதான் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு மில்லைத் தவிர வேறு சொந்த வீடு எதுவும் இல்லை என்றால் எனக்கு தெரியாது. எலக்ட்ரிக் கனெக்சனில் எனக்கு கூடுதல் வாட்ஸ் உள்ள இணைப்பு உள்ளது என்றாலும், பிரதிவாதிக்கு குறைந்த வாட்ஸ் உள்ள இணைப்பு உள்ளது என்றாலும் சரியல்ல. குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்களில் சர்வீஸ் கனெக்சன் மட்டும் சொல்லப்பட்டுள்ளது என்பதாலும், இயந்திரங்கள் பற்றி சொல்லப்படவில்லை என்பதாலும் நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை -இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2024.01.10 16:45:53 +0530

Principal District Judge,
Dindigul.